தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 24, திருவள்ளுவர் ஆண்டு–2053

2022 ஏப்ரல் 7, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்
நீள்வினையான் நீளும் குடி."

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவன் அயராது பாடுபட்டால் அவனைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

அதியமான் கோட்டத்தை மேம்படுத்துதல்

***11616—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை ஊராட்சி, அதியமான் கோட்டத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை ஊராட்சி, அதியமான்கோட்டத்தை மேம்படுத்தி, புதிய தொழில்நுட்பத்தின் மூலமாக அவர் குறித்த தகவல்களை ஒளிபரப்பு செய்வது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழுக்கு அரும்பணி செய்திடவே, ஆயுளை நீடிக்கும் அருநெல்லிக்கனியை ஔவை மூதாட்டிக்கு அளித்தார் கடையெழு வள்ளல்களில் ஒருவராக, சிறப்புப் பெற்ற, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தகடூரை ஆண்ட, ஆற்றல்மிகு மன்னன் அதியமான். அவர் வாழ்ந்த தகடூர், தமிழ் மண்ணில் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான் கோட்டை கிராமத்தில் அமைந்துள்ளது. அவரின் பெருமையைப் போற்றும் வகையில் அமைந்துள்ளதுதான் அதியமான் கோட்டம். சேலம்–தருமபுரி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது இந்த அதியமான் கோட்டம். தமிழையும், தமிழ் புலவர் ஔவையையும் நேசித்த வள்ளல் அதியமானின் கோட்டம் மேம்படுத்தப்பட வேண்டுமென்பது தருமபுரி மாவட்ட மக்கள் மட்டுமல்ல, தமிழ் ஆர்வலர்களின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பும் ஆகும். ஔவைக்கும் பெருமை சேர்க்கும்விதத்தில், அதியமானின் வாழ்க்கை வரலாற்று ஓவியங்களை அதியமான் கோட்ட வளாகத்தில் காட்சிப்படுத்த வேண்டும். மேலும், அதியமான் கோட்டத்தில் அதியமானின் வரலாற்றுப் பெருமையை ஒலி, ஒளி காட்சிகள்மூலம் ஒளிபரப்பிடவும் ஆவன செய்திட வேண்டும். கோட்ட வளாகம் முழுவதிலும் பூங்கா அமைத்து, பராமரித்திட வேண்டும். அதுமட்டுமல்லாமல், இந்த வளாகத்தில் பல நூறு இளைஞர்கள், ஏழையெளிய மாணவர்கள் தினந்தோறும் அமர்ந்து போட்டித் தேர்வுகளுக்கு தீவிரமாகப் படித்துவருகிறார்கள். மாணவர்களுக்காக அங்குள்ள சிறிய நூலகத்தை வரலாற்று நூலகமாக மட்டுமின்றி, போட்டித் தேர்வுகளுக்குப் படித்துவரும் மாணவர்களுக்கு அறிவுக் களஞ்சியமாகப் பயன்படும் வகையில் சிறந்த நூலகமாக மாற்றியமைத்திட வேண்டும். அதியமான், ஔவை

2022 ஏப்ரல் 7]

ஆகியோரைப் பெருமைப்படுத்தும்விதமாக ஆண்டுதோறும் அரசு விழா எடுத்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு பெரிய கட்டுரையை, நீண்ட கட்டுரையை வாசிக்கிறீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *அதியமானுக்குப் பெருமை சேர்க்கும்விதமாக அதியமான் கோட்டத்தை மேம்படுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்களின் அரசு நடைபெற்றபொழுதுதான், 28–2–2009 அன்று ஏறத்தாழ 115 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தருமபுரி மாவட்டத்திலே அந்தக் கோட்டம் அமைக்கப்பட்டது. நினைவில் வாழும் ஐயா மாண்புமிகு பேராசிரியர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு அது ஒப்படைக்கப்பட்டது. சுமார் 300 பேர் அமரக்கூடிய அளவிலான அந்தக் கோட்டம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அரசு நிகழ்ச்சிகளுக்காக வழங்கப்பட்டு வருகிறது. இப்போது அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. எதிர்காலத்தில் இதுபோன்ற அரங்கங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு, சுபகாரியங்கள் நடத்துவது போன்றவற்றுக்கு வழங்கப்படுவது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுகுறித்து, துறை தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. ஆங்காங்கே உள்ள இதுபோன்ற கோட்டங்களையும், அரங்கங்களையும் மேம்படுத்த பொதுப் பணித் துறையினால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. புதிதாக அமைக்கப்படவிருக்கின்ற மணிமண்டபங்கள்கூட அரங்கங்களாக அமைக்கப்படவிருப்பதாக இப்போது அரசு கொள்கை முடிவெடுத்துள்ளதால், எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் கருத்தில்கொண்டு, அதுகுறித்து அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்ஜெட் கூட்டத்தொடரில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியதற்கிணங்க, தருமபுரி மாவட்டத்தில் 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அருங்காட்சியகத்தை அதியமான் கோட்டம் அருகில் உள்ள அருங்காட்சியகத்துடன் இணைப்பதற்கு ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கக்கூடிய தருமபுரி அருங்காட்சியகத்தை அதியமான் கோட்டம் அருகில் உள்ள அருங்காட்சியகத்துடன் இணைப்பதற்கான கருத்துருவிற்கு அரசினுடைய ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று அதற்கான ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா, மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

65—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

***3093—திரு. எம்.சி. சண்முகையா:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—